# திருமணங்கள் சொர்கத்தில்





By
நடராஜன்
நாகரெத்தினம்

# மணமக்களோ நரகத்தில்








**பதிப்பு விவரம்**

**புத்தகத் தலைப்பு;**

திருமணங்கள் சொர்கத்தில்-

மணமானோர் நரகத்தில்.

**ஆசிரியர்;**

நடராஜன் நாகரெத்தினம்

natarajan.naga@gmail.com

**மின்பதிப்பு;**

January 2014

பக்கங்கள்;

அச்சு; 14 புள்ளி

**பதிப்புரிமை;**

ஆசிரியருக்கு

## Contents

முகவுரை.

**பாகம் ஒன்று**

1. அடிப்படைக் கேள்விகளுக்கு அதிரடி பதில்கள்!
2. இரண்டு கேள்விகள்
3. திருமணங்கள் அவசியம்
4. திருமணம் என்னும் ஒரு ஏற்பாடு
5. மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை எட்டமுடியாத இலக்கு இல்லை!
6. காதல் வரலாமா?
7. திருமணமும் புராணங்களும்
8. திருமணத்தில் மனிதர்கள்

**பாகம் இரண்டு**

9. வலியில்லாத (திருமண) வாழ்வுக்கு வழிகள்
10. நுகத்தடியும் திருமணமும்
11. வாழ்க்கை இனிக்கத் தேவையானது
12. எவரும் மறுக்க முடியாத - மறக்கக் கூடாத
13. திருமணங்களில் திண்டாட்டம்.
14. நாம் உணராத பல பரிமாணங்கள்
15. திருமண வாழ்வில் பெற்றோரின் பங்கு
16. பெற்றோர்கள் காரணமா?
17. வாழ்க்கை ஒரு தொடர் ஓட்டம்!
18. மன்மதன் போட்ட மலர் அம்புகள்
19. மனம் ஒருமித்த கணவன் மனைவி

20. இளைஞர்களின் தயக்கம்,
21. (திரு)மணங்களும், மதங்களும

பாகம் மூன்று

Jokes

# முகவுரை

இந்த அண்டத்தில், பதில்லில்லாத கேள்விகளோ, கேள்விகளே எழாத பதில்களோ இல்லை. அது போல, தீர்வுகள் இல்லாத பிரச்சனைகளோ, அல்லது பிரச்சனை எழாத தீர்வுகளோ இந்த அண்டத்தில் கிடையாது.

இந்தப் புத்தகத்தில், திருமணம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில்களும், பிரச்சனைகளுக்குத் தீர்வும் கண்டுபிடிப்போம்.

## திருமணங்களில் திண்டாட்டம்.

இன்று நாம் அறிந்ததில், மத்திய தர வருமானமுள்ள பல குடும்பங்களில், திருமணங்கள். ஒரு மிகப் பெரிய பிரச்சனை.

ஐந்தும் பெண்ணானால் அரசனும் ஆண்டியாவான் என்பது ஒரு முது மொழி. ஆனாலும் பல திருமணங்கள் நடந்தேற பணம் மாத்திரமே ஒரு பெரிய பிரச்சனை இல்லை;

திருமணச் செலவு ஒரு மாபெரும் சுமையானாலும். அதை சிறப்பாகக் கொண்டாடத் தேவையான பணம் மற்றும் பொருள் சேர்ப்பது வாழ்வின் ஒரு பாகமாகிவிட்டது.

எனவே, திருமணங்கள் நடந்தேற பணம் ஒரு அடிப்படைத் தேவையாக இருந்தாலும், அதுவே ஒரு பெரும் தடையாக இருந்ததில்லை.

## வரதட்சிணை, ஒரு கொடுமை தான்

நேஷனல் ஜியோகிராபிக்ஸ் போன்ற தொலைக் காட்சிகளில், அவ்வப்போது இருண்ட கணடத்தின் ஏதோ ஒரு ஓரத்தில், மேற்கத்திய நாகரிகத்தில் பாதிப்பு சிறிதும் பரவாத காடுகளில், உடை எதுவுமே அணியாத வாழும் சமுதாயங்களைக் காண்கிறோம். அப்பொழுது, அவர்களின் வாழ்வின் எல்லாப் பரிமாணங்களும் அலசப்படும். அதில் அவர்களின் திருமணமும் ஒன்று.

இவர்களும் மணப்பெண்ணிற்கு பன்றிகள் முதலான வளர்ப்பு மிருகங்களை வரதட்சணையாகத் தருவதைக் அறியலாம்.

ஏதோ, விரலுக்கேற்ற வீக்கம் என்பார்களே! இவர்கள் தங்கம் அணிவதில்லை ((துணியே அணியாத மக்கள் நகைகள் எங்கே அணியப்போகிறார்கள்!)

இவர்களின் உடமைகளை மதிப்பிட்டால் நம் நாட்டின் பண மதிப்பில் Rs 100 வரை தேறுமா என்பது சந்தேகம்.

**வரதட்சணை, வேறு எந்த பெயரிலும், தவறல்ல.**

ஒரு இளம் தம்பதி, அவர்கள, தங்களின் திருமண வாழ்வில் முதல் அடி வைத்து நடக்கத் தொடங்குகிறார்கள். அப்போது பெரியவர்கள் தாங்களின் சேமிப்பில் ஒரு பங்கு, அவர்களுக்குத் தந்து, வாழ்க்கைப் பயணத்தை எளிதாகவும் இனிமையாகவும் ஆரம்பிக்க அமைத்துத் தருவது ஒரு நல்ல சிந்தனைதானே!

ஆனால் வரதட்சிணையை ஒரு காரணமாகக் காட்டி பெண்ணையும், பெண்ணைப் பெற்றவர்களையும் துன்புருத்துவது மிருகத்தனம். மனிதர்களின் குணங்களை ஆராயும்போது, ஒவ்வொரு மனிதனும் இயற்கையிலுள்ள பல மிருகங்களின் குனங்களின் விதவிதமான கலவைகளாக அறியலாம்.

பல குடும்பங்களில், குறிப்பாக மணமகனின் தாய், அக்கா, தங்கை போன்ற உறவுகள் பெரும்பாலோரி, தங்கள் மத்தியில் ஒரு பெண்ணின் வரவை விரும்புவதில்லை.

புதிய வரவு, பழைய உறவை குறைத்துவிடும் என்ற அச்சமும் ஒரு காரணமோ?

புதிய வரவின் (மணமகளின்) பங்கும் குறைவில்லை.

தன் கணவனின் வருமானத்தில் பழைய உறவுகள் பங்கு தேடுமோ என்ற பயத்தில், புதிய வரவு செய்யும்

கொடுமைகளுக்கும் குறைவில்லை.

மொத்தத்தில் அறிவில் குறைந்த அனைவரும் புதியதாக தொடங்கும் ஒரு மணவாழ்வில் மகிழ்ச்சியைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

தொல்லையின் முழுக்காரணங்கள் பெண்கள் தானா? ஆண்களுக்கு பங்கே இல்லையா? ஏன் இல்லை? ஆனால் அவை அளவில் குறைவு. அவ்வளாவுதான்.

இவற்றை, சில உண்மைக் கதைகள் சொல்லி விளக்கிடலாம். தொல்லைகளைக் குறைக்க சில வழிகளையும் சொல்லிடுவோம்.

**மணமகள் பற்றாக்குறை ஒரு உண்மை;**

ஒரு காலத்தில் வரதட்சிணைக் கொடுமை அதிகரித்ததினால் உலகில் வரும் முன்னே பெண்கள், கருவிலே அழிக்கப்பட்ட கொடுமை, இன்று பெண் பற்றாக்குறை ஒரு பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

**கலையும் கனவுகளும் உடையும் உறவுகளும்;**

திருமணங்கள், ஒரு குடும்பத்தில் மிகப் பெரும் செலவில். நடந்தேறும் ஒரு கொண்டாட்டம்.

இளைஞர்கள், தங்கள் வாழ்வில் பலவிதக் கனவுகளுடன் எதிர்பார்க்கும் ஒரு மாபெரும் நிகழ்வு.

அப்படி ஒரு பெரும் செலவில் நடத்தப்பட்ட திருமணங்களில் இணைந்த மணமக்கள் குடும்பம் நடத்துவதற்குப் பதில் குடும்ப நீதிமன்றத்தை ஏன் அடைகிறார்கள்?

சமீப காலத்தில், சென்னையில் உள்ள குடும்ப நீதி மன்றங்கள் நான்கு மடங்கு எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன.

சென்னையில் மட்டும் சுமார் 16000 வழக்குகள் உள்ளன. இந்த நிகழ்வுகள்,

- பெற்றொருக்கும் மற்றோருக்கும் பெரும் துயரம் தரும் நிகழ்வுகள்.
- இவை படைத்தவன் (இறைவன்) தொழிலில் இடையூ செய்வதாகக் கொள்ளலாம்.
- இவற்றை தடுக்க இயலாவிட்டாலும், குறைக்க முடியும். அதன் அடிப்படையில் எழுதப்பட்டது இந்தப் புத்தகம்.

இந்த புத்தகத்தில் ஒரு வாசகர் என்ன எதிர்பார்க்கலாம்.

திருமணம் தவிற்க இயலாதென்றால், திருமணத்தில் உரிய காலத்தில் புகுந்து, அதில் எழும் துயரங்களைத் தவிர்த்து மகிழ்ச்சியைக் கலந்து நலமாக வாழ என்ன செய்ய வேண்டும்?

சில கற்பனை, பல உண்மை நிகழ்வுகளை உதாரணம் காட்டி, சுவர்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் இணைந்து, நரகத்தில் தள்ளப்பட்ட மணமக்களை மீட்டு மகிழ வைப்போமா?

திருமணத்தைப் பற்றியும், மணவாழ்க்கையின் நிகழ்ச்சிகளில் காணும் நகைச்சுவையையும் ஆங்காங்கே கலக்கப் போகிறேன்.

திருமணங்களில் திண்டாட்டம் என்னும் பிரச்சனை புதில்லை என்றாலும், தற்காலத்தில் பெரும்பாலும் உயர்கல்வி பெற்ற மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.. எனவே, வாசகர்களுக்கு ஆங்கிலத்தில் தேவையாயான புலமை இருக்கும் என்பதை மனதில் கொண்டு, சில செய்திகளை மொழிபெயர்ப்பு செய்யாமல் அப்படியே வெளியிடப்பட்டுள்ளது.

நடராஜன்

பங்களூரு

# பாகம் ஒன்று

# அத்தியாயம்1
# அடிப்படைக் கேள்விகளுக்கு
# அதிரடி பதில்கள்!

**தாம் பற்றிய உறவே, தாம்பத்திய உறவாகியதோ?**



- **திருமணங்கள் அவசியம்தானா?**
- திருமணங்கள், முன்பதிவு செய்யாமல், நடந்தேறும் ஒரு இரண்டாம் வகுப்பு ரயில் பயணம்?
- **திண்டாடியானாலும் திருமணங்கள், தொடர்வது ஏன்?**
- **காதல் வரலாமா?**
- **பிள்ளைப் பேறில்லை ஏங்குவது ஏன்?**

## 1. திருமணங்கள் அவசியம்தானா?

இதற்குச் சரியான பதில்; வயதுககு வந்து திருமணம் . ஆகாதவருக்கு, திருமணம் அவசியம். ஆனால், திருமணம் ஆனவருக்கோ, திருமணம், ஒரு தேவை இல்லாத ஒரு பளு.

*மனிதரைத் தவிர மற்ற உயிர்களுக்கு திருமணம் என்னும் ஒரு பந்தம் இருப்பதாகத் தெரியவில்லையே!*

மேலெழுந்த வாரியாகக் காணும்போது, பிற உயிர்களில் பந்தங்கள் தெரிவதில்லை. பந்தங்கள் இல்லவே இல்லை என்று சொல்ல எந்த ஆதாரமும் இல்லை.

புராணங்களின் செய்திகளை உண்மை என்று கொண்டால், மனித உயிர்களுக்கு ஒரு பதவி உயர்வு கிடைத்து, தெய்வங்களாக மாறும்போது ஒன்றல்ல, இரண்டு மனைவிகளுடன் குடும்பம் நடத்துகிறார்கள்.

- **பிரம்மாவின்** மனைவிகள்; **சரஸ்வதி - மாயா.**
- **விஷ்ணுவின்** மனைவிகள் **ஸ்ரீதேவி- பூதேவி**
- **முருகனுக்கு** ஒரு வள்ளியும் தெய்வானையும்

இவர்களுக்குள் ஒரு பிரச்சனை எழுந்ததாக புராணங்கள் சொல்லவில்லை. இது தேவர்கள் வாழும் உலகத்தின் மகிமையா?

ஆனால் மனித அவதாரம் எடுத்த விஷ்ணு ஒரே ஒரு மனைவியுடன் அவதிப்பட்டு, பலகாலம் பிரிந்து வாழ்ந்தது புராணத்தில் உள்ளது. இது நம் உலகத்தின் நியதியா?

இப்பொழுது கடவுள் என்று ஒன்று உண்டா, இல்லையா என்பது பிரச்சனை இல்லை. ஞானிகளும், பேருயிர்கள் இருப்பதை உணர்ந்து எழுதியிருக்கிறார்கள்.

அது உண்மையானால். பரிணாம வளர்ச்சியில் நாம் பல

**பேருயிர்களுக்கு**ப் பின்னால் இருப்பதும் உண்மை.

அதுபோலவே நாம் பல உயிர்களுக்கு **முன் நிற்கிறோம்.**

இதை ஞானிகளும், விஞ்ஞானிகளும் செல்கிறார்கள்.

இந்தப் பரிமாண வளர்ச்சியின் நியதியில், உயிர்களின் செயல்பாட்டின் தேவைகளில், மனிதருக்கு திருமணம் அவசியமானதாகவே எண்ணலாம்.

குடும்பங்களாக வாழ்வதற்கு, உத்தேசமான ஒரு காரணம், உருவாக்கிய தந்தை தாய் பாட்டி, பாட்டன் ஆகிய அனைவரும் தம் சந்ததிகளை, அடுத்த பரிமாணத்திற்கு தயார் செய்வதாக இருக்கலாம்.

இதை நாம் குத்துமதிப்பாகச் சொல்ல ஆதாரம் தருவது மதங்கள். மதங்களைத் தோற்றுவித்தவர்கள் அறிவின் சிறந்தவர்கள். நம்மைப் படைத்தவனுடன் கை குலுக்கியவர்கள்.

எல்லா மதங்களும் திருமண பந்தத்தை வலியுறுத்துகின்றன.

**காரணம், மாயை என்று கண்டாலும், தேவை என்னவோ படைத்தவனுக்குத்தானே?**

**2. திருமணங்கள், ஒரு ரயில் பயணம் போன்றது**

அதுவும், முக்கியமாக, முன்பதிவு செய்யாமல், இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்வதற்குச் இணையானது.

பண்டிகைக் காலங்களில் முன்பதிவு செய்து ரயில் பயணம் செய்ய இயலாத நிலையில், பலர் ஜெனரல் கம்ப்பார்ட்மெண்டு எனப்படும் பெட்டிக்குள் பயணம் செய்வோம்.

அப்படிப்பட்டக ரயில் பெட்டியின் அடையாளங்கள் என்னவென்றால், சுமார் 100 பயணிகளுக்கான ஒரு ரயில்

பெட்டியில் 300 மக்கள் ஏறியிருப்பார்கள். விளக்குகள் எரியாது. டாய்லெட்டில் தண்ணீர் வராது. சகிக்க இயலாத துர்நாற்றம், கட்டாயம் வரும்.

நாமும், அதில் ஏற முயற்சி செய்வோம். உள்ளே இருப்பவர்கள் உள் பக்கமாக கதவை தாளிட்டு, வேறு பெட்டியில் செல்ல நம்மை அறிவுருத்துவார்கள்.

மூச்சுவிடவோ, அசையவோ இடமில்லாததைச் சுட்டிக் காட்டுவார்கள்.

ஏற முயற்சி செய்பவர்கள் உள்ளே இருப்பவர்களுடன் வாக்குவாதம் செய்வார்கள். சண்டையிடுவார்கள்.

எப்படியோ (உள்ளே வெற்றிகரமாக நுழைந்தவர்கள் உதவியுடன்) அடிபட்டு, காயங்களுடன் ஓரிருவர் நுழைவார்கள். உள்ளே ஏறிதும், அவர்கள் வாதங்கள் திசைமாறிவிடும்.

திருமணமானவரகள் ரயில் பெட்டியில் ஏறியவர்களாகச் சொல்லலாம். ரயில் பெட்டியில் ஏற முயற்சி செய்வோர் திருமணத்திற்கு காத்திருக்கும் இளைய தலைமுறை எனலாமா?

திருமணமானவர், காத்திருப்பவர்களை எச்சரிப்பதும், அதை காத்திருப்பவர் அலட்சியம் செய்வதும் காலம் காலமாக நிகழ்கிறது.

பயணங்கள் விடாது தொடரும். ஏனென்றால், உயிர்களின் பயணங்கள் நம்மைப் படைத்த கடவுளுக்காக நடந்தேறும் ஓட்டங்கள்.

ரயிலில் ஏறாமலும், ஏற முயற்சி செய்யாமலும் ரயில்வே ஸ்டேஷனில் பலரைக் காணலாலாம், அவர்களை என்னவென்று சொல்ல?

## இல்லறமே நல்லறம்

வள்ளுவரும் சரி, நாலடியார் என்று பல அறிஞர்களுடைய படைப்புகள் இருப்பதை அறிவோம். இதெல்லாம், அறிவு நிரைந்தவை. அதை பல அறிஞர்கள் பல காலம் பல துளிகளாகச் சேர்த்ததை இன்று, நமக்கு **பாஸ்ட்-புட்** (Fast food) போல உபயோகிக்கத் தயாரா இருக்கு.

இந்த அறிவை, நமது முயற்சியில் அடைந்து, சேர்க்க வாழ்னாள் முழுவதும் போதாது..

துயரம் என்னவென்றால், இதை அறிவு என்று அறிந்து பயன்படுத்தவும் ஓரளவு அறிவு தேவை. நமக்கு அங்கேதான் குறைவு வருகிறது!

**வள்ளுவர், சுத்தமா சொல்லிட்டாரு.**

இரண்டே வழியா வாழலாம். ஒண்ணு **இல்லறம்** மற்றது **துறவறம்.** இதிலே சிறந்தது இல்லறம் என்று திட்டவட்டமா சொல்லிட்டாரு.

சாமியாராகி குடும்பம் நடத்தாமே தப்பிச்சுடலாமுன்னு ஆசைப்படாதீங்க. **மாயை விடமாட்டாள்.**

## அத்தியாயம் 2

# இரண்டு கேள்விகள்

- **திருமணம் தேவைதானா?**
- **திருமண வாழ்வு தொல்லை நிறைந்ததா?**

திருமணமானவர் சிலரை, இந்த இரண்டு கேள்விகள் கேட்டபோது சேகரித்த செய்திகள் இவை;

1. ஒரு கணவன் சொல்கிறார்:

திருமணங்கள் தேவையில்லாதவை. மணவாழ்வு தொல்லை நிரைந்தது. வயதுக் கோளாரினால், பெண் ஒரு ஆண் துணை தேடுகிறார்கள். அதே போல ஆண்களும்.

அய்யா, ஒரு பிள்ளை பெற்று, அதை வளர்த்து, நோய் நொடியிலிருந்து மீட்டு, அவர்கள் தரும் தொல்லைகளை சமாளித்து, வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி பெரும் செலவில் அவர்களுக்கு கல்வி அளித்து, அவர்களைத் தன் கால்களில் நிற்கும் வரை போராடி வருவது ஒரு புறமிருக்க.

கனவுக் கன்னியாகக் காட்சி தந்து மனைவி என்னும் பதவியைப் பிடித்த பெண், பேயாக மாறி தன் வழியே நல்வழி என்று அடம்பிடிக்கும் அவலம்.

அதில் ஆண்கள் பலர், தன் பெற்றோரையும் உற்றோரையும் கழட்டிவிடும் கட்டாயத்தில் தவிக்கும் பாடு, என்று எத்தனையோ சொல்லலாம்.

மொத்தத்தில் வயதுக்கோளாறு, மனிதரை திருமணத்தில் சிக்கவைத்து, மீளாத்துயரில் தள்ளிவிடுகிறது எனலாம்.

2. ஒரு மனைவி சொல்கிறார்:

கணவர்கள் எல்லாம் கனவான்களும் இல்லை. மனைவிகள் அனைவரும் பேய்களும் இல்லை.

திருமணத்திற்கு முன் ஒரு முகமூடி அணிந்த முகமும், பின்னர் உண்மை முகமும் காட்டும் ஆண்கள் எத்தனை பேர்?.

காதல் திருமணத்தில் ஆரம்பித்து, திருமணமான பின், வரதட்சிணை கேட்டு கொடுமை செய்யும் பேராசை பிடித்த பெற்றோருக்கு துணைபோகும் கோழைக் கணவர்கள் எத்தனை பேர்?

மனைவி உழைப்பில், உல்லாச வாழ்வு நடத்தும் ஆண்கள் இல்லாத காலமோ ஊரோ இல்லை அல்லவா?

திருமணத்தில் திண்டாடுவது ஆண்களல்ல பெண்களே!

3. திருமணமாகாதவர் பலரையும், மனைவியை, கணவரை இழந்த சிலரையும் பிடித்து இந்தக் கேள்வியை கேட்டபோது கிடைத்த பதில், பின் வருகிறது:

முதல் நபர், தன் ஒரே ஒரு கேள்வியில், தன் பதிலை சொல்லிவிட்டார்.

திருமணவாழ்வில் குறைகூறும் இவர்கள் திண்டாடுவது உண்மை என்றால் திண்டாடுவதாகச் சொல்பவர்கள் அனைவரும் ஏன் விவாகரத்து செய்து கொள்வதில்லை?

வேறு ஒருவர் சொல்கிறார்: வாழ்க்கையில் இனிமையும் உண்டு, வலிகளும் உண்டு. இதை உணராதவர்கள் அறிவில்லாதவர்கள். அழுதழுதே வாழ்ந்து பின் சாகப் பிறந்தவர்.

மூன்றாவதாவதாகப் பேட்டி கொடுத்தவர் சொல்கிறார், அய்யா, எங்களைப் போன்றவர்கள், திருமணமாகாதவர்கள், மணவாழ்வில் கசப்பான நிகழ்வுகளை உணர்ந்ததில்லை, ஆனால் கண்டு, கேட்டு அதன் காரணமாக ஓரளாவு ஊகிக்க

முடியும்.

அதோடு, நாங்கள் அனுபவிக்காமலேயே, இனிமையை ஊகத்தால் உணர முடியும்.

வாழ்வு பல் சுவை கொண்டது கசப்பு இல்லாத வாழ்வில் இனிமையை உணர இயலாது.

வேறு ஒருவர் இப்படிச் சொல்கிறார்:

திருமணத்தில் திண்டாடுவதாகச் சொல்பவர்கள் அறியாமையில் மூழ்கியோர் எனலாம். அவர்கள் மணவாழ்வில் தங்களுக்குக் கிடைக்கும் இனிமையை உணர்வதில்லை.

தங்களின், அறியாமையால் அவர்கள் சேகரிக்கும் துயரங்களை மட்டுமே மனதில் சுமக்கிறார்கள். தவறு ஆண்பெண் இணைந்து வாழ்வதில் இல்லை. வாழ்வின் அடிப்படைகளை உணராத்தே.

வேறு ஒருவர் கேட்கிறார், அய்யா, ஒரு சிலர் திருமணமாகி பின், பிரிந்து வாழத் தீர்மானிக்கிறார்கள். பிரிந்த அனைவரும் மகிழ்ச்சி நிரைந்து வாழ்கிறார்களா?

கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனும் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்களா?

அப்படி எவரேனும் உண்டென்றால், ஒரே ஒருவரை எனக்குக் காட்டுங்கள் என்கிறார்.

## சில ‘ஏன்’ கள்
## அனைத்திற்கும் ஒரே ஒரு பதில்

- **திருமணம் தொடர்வது ஏன்?**

திருமணம் என்று ஒரு நிகழ்வு யாருக்காக? அனேகமாக எல்லாத் திருமணங்களும் ஏதோ ஒரு விதத்தில்

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below

Free-Ebooks.net